**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 141/2024**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Manisha Malini |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 24th day of February 2025.

**(A1 to A3 are present.)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார். (Incamera Proceedings)

**முதல் விசாரணை**

நான் தற்போது நெமிலி அகரம் கிராமம், திருவள்ளூரில் வசித்து வருகிறேன். நான் தற்போது சென்னையில் ஒரு ஐடி கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். நான் எஸ்சி ஆதிதிராவிடர் சமூகத்தை சார்ந்தவர். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள்

இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். எதிரிகள் கவர நாயுடு சமூகத்தை சார்ந்தவர்கள். கடந்த 2016ம் வருடம் B.E. ECE 2வது வருடம் நான் திருப்பாச்சூர் வெங்கடேஸ்வரா கல்லூரியில் படித்து வந்தேன். என்னுடன் விஜய், அரவிந்தன் ஆகியோர் படித்தார்கள். அப்போது ஆஜர் எதிரிகளில் விக்னேஷ் அதே கல்லூரியில் B.E. Mechanical Engineer 1வது வருடம் படித்து வந்தார். கல்லூரியில் வாட்ஸ்அப் குரூப் ஆரம்பித்தார்கள். அதில் இரண்டு பேரும் நண்பர்கள் ஆனோம். இரண்டு வருடங்கள் என்னுடன் நண்பராக பழகி வந்தார். 2019ம் வருடம் என்னை காதலிப்பதாகவும் திருமணம் செய்துக்கொள்வதாக கூறினார். நான் வேறு சாதி என்று அவரிடம் கூறினேன். அவர் அதற்கு நான் பார்த்துக்கொள்கிறேன் என்று கூறினார். 17.06.2019 அன்று அவர் என்னை அவரது பெற்றோரிடம் அறிமுகம் செய்து வைப்பதாக கூறி அவரது வீட்டிற்கு அழைத்துச்சென்றார். நான் அவருடன் சென்றேன். அவர் வீட்டில் அவர் அப்பா, அம்மாவிடம் என்னை நண்பர் என்று கூறி அறிமுகம் செய்தார். அங்கிருந்து 01.00 மணிக்கு கூல்டிரிங்ஸ் வாங்கி தருவதாக கூறி பெரியபாளையம் செங்காத்தன்குளம், பாஃரஸ்ட் ஏரியாவில் உள்ள முந்திரி தோப்பிற்கு என்னை அழைத்துச்சென்றார். ஏன் இங்கே அழைத்து வந்தாய் என்று கேட்டதற்கு தனியாக பேச வேண்டும் என்று கூறினார். அங்கு வைத்து என்னுடைய அந்தரங்க உறுப்புக்களை என் அனுமதியில்லாமல் தொட்டார். நான் வேண்டாம் என்று கூறியும் எனக்கு நம்பிக்கை கொடுத்து என்னுடன் வலுக்கட்டாயமாக உடலுறவு கொண்டார். திரும்பவும் நவம்பர் மாதம் அவர் வீட்டில் அவர் பெற்றோர் இல்லாத நேரம் இருசக்கர வாகனம் ஓட்ட கற்று தருவதாக என்னை வரச்சொன்னார். அவர் பெற்றோர் இல்லாத நேரத்தில் அவர் வீட்டில் இருந்த நேரத்தில் என்னை கட்டிப்பிடித்து, முத்தம் கொடுத்து, என் அந்தரங்க உறுப்புக்களை தொட்டு வலுக்கட்டாயமாக என்னுடன் உடலுறவு கொண்டார். இதேபோல் பல முறை என்னை அழைத்துச்சென்று மேற்கூறியவாறு உடலுறவு கொண்டார். நான் திருமணம் செய்துக் கொள்ள கேட்டபோது அவர் வீட்டில் பெற்றோரிடம் பேசுவதாக கூறினார். அவர் வீட்டில்

பேசியபோது அவரின் பெற்றோர் நான் கீழ் சாதி என்றும் அவர்கள் மேல் சாதி என்று கூறி திருமணத்திற்கு ஒத்துக்கொள்ள முடியாது என்று கூறியதாக என்னிடம் கூறினார். நான் மறுபடியும் அவர் வீட்டிற்கு சென்று அவர் பெற்றோரிடம் பேசும்போது விக்னேஷின் தாயார் எதிரி நிர்மலா என் சாதி பெயரை சொல்லி அசிங்கமாக திட்டி பற தேவடியா என்று திட்டி, கை ஓங்கி என்னை அடிக்க வந்தார், கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார். விக்னேஷின் தந்தை அவர் வீட்டு பக்கத்தில் உள்ள மரக்கிளையை எடுத்து வந்து என்னை அடித்து என் சாதியை பற்றி தரக்குறைவாக பேசி நான் மேல் சாதி, நீ கீழ் சாதி, என் மகனை உனக்கு திருமணம் செய்து கொடுக்க முடியாது என்று கூறினார். என்னை அங்கு வைத்து அசிங்கப்படுத்தி துரத்திவிட்டார்கள். நான் திருவள்ளூர், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 09.07.2023 அன்று புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **புகார் அதசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம் காட்டப்படும் என்னுடைய சாதிச்சான்றிதழை நான் போலீசாரிடம் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 141/2024**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW2<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Jeyanthi |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 24th day of February 2025.

**(A1 to A3 are present. )**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார். (Incamera Proceedings)

**முதல் விசாரணை**

நான் தற்போது நெமிலி அகரம் கிராமம், திருவள்ளூரில் வசித்து வருகிறேன். நான் தற்போது சத்துணவு கூடத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் எஸ்சி ஆதிதிராவிடர் சமூகத்தை சார்ந்தவர். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள்

இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். எதிரிகள் கவர நாயுடு சமூகத்தை சார்ந்தவர்கள். அசா.1 என் மகள் ஆவார். எனக்கு இரண்டு மகள்கள், ஒரு மகன் உள்ளார்கள். என் மகள் மனீஷா மாலினியை 2016ம் வருடம் திருப்பாச்சூர், வெங்கடேஷ்வரா கல்லூரியில் BE ECE பிரிவில் சேர்த்தோம். அவர் படித்துக்கொண்டிருந்தபோது வாட்ஸ்அப் மூலம் விக்னேஷ் என்பவர் நண்பராகி உள்ளார். என் மகளிடம் காதலிப்பதாக கூறியுள்ளார். என் மகள் தான் வேறு சாதி என்று அவரிடம் கூறியுள்ளார். விக்னேஷ் என் மகளை திருமணம் செய்துக் கொள்வதாக கூறியுள்ளார். 17.07.2019 அன்று விக்னேஷ் அவர் பெற்றோரிடம் என் மகளை அறிமுகம் செய்துள்ளார். திரும்பவும் என் மகளிடம் பேசியுள்ளார். இரண்டாவது முறையும் விக்னேஷ் அவர் வீட்டிற்கு அழைத்துச்சென்று நண்பர் என்று அறிமுகப்படுத்தியுள்ளார். செங்காத்தான்குளம், முந்திரி தோப்பிற்கு அழைத்துச்சென்று என் மகளின் விருப்பம் இல்லாமல் உடலுறவு கொண்டுள்ளார். மறுபடியும் வண்டி ஓட்ட கற்று தருவதாக கூறி அவர் வீட்டிற்கு அழைத்துச்சென்று அங்கே வைத்தும் உடலுறவு கொண்டுள்ளார். என் மகளுக்கு திருமணப்பேச்சு எடுத்தபோது கொஞ்ச நாட்கள் போகட்டும் என்று என் மகள் கூறினார். பின்னர் தான் ஒருவரை விரும்புவதாக கூறினார். என் மகள் விக்னேஷின் வீட்டிற்கு சென்று கேட்கிறேன் என்று கூறினார். அவர்கள் சாதியை வைத்து பேசுவதாக கூறினார். எதிரிகள் தாங்கள் உயர்ந்த சாதி என்றும் நீ தாழ்ந்த சாதி, பற தேவடியா உங்களுடன் சம்மந்தம் செய்ய முடியாது என்று கூறியுள்ளார்கள். விக்னேஷின் தந்தை மரக்கிளையை எடுத்து என் மகளை அடித்துள்ளார். விக்னேஷின் தாயார் அடிக்க கை ஓங்கி வந்துள்ளார். இன்னொரு முறை வீட்டிற்கு வந்தால் கொலை செய்து விடுவேன் என்ற மிரட்டியுள்ளார். என் மகள் வீட்டிற்கு அழுதுக்கொண்டு வந்தார். என்ன என்று கேட்டபோது என்னை ஒருவன் ஆசைவார்த்தை பேசி என்னை misuse செய்து விட்டான், அவர் பெற்றோர் என்னை பற சாதியில் பிறந்த தேவடியா என்று கூறியதாக என்னிடம் கூறினார். திருவள்ளூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார்

கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.